## மதுரையில் மர்மமான முறையில் மாணவன் உயிரிழப்பு:

## சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடுக!

# நீதி கேட்டு போராடிய குடும்பத்தினர் மீது வழக்குப் பதிவு செய்வதா?

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!



சென்னை,செப்.19

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

மதுரையில் மர்மமான முறையில் உயிரிழந்த சிறுவனின் மரணத்துக்கு நீதி கேட்டு போராடிய அவருடைய குடும்பத்தார் மீதே வழக்குப்பதிவு செய்துள்ளதை வன்மையாக கண்டிக்கிறேன்.

பெற்ற பிள்ளையை இழந்து நீதி கேட்டு போராடினால், வழக்கு போடுவதும், மாற்றுத்திறனாளி என்றும் பாராமல் அவரது உறவினரை விசாரணைக்கு வர சொல்லி summon அனுப்புவதும் எந்த வகையிலும் ஏற்க முடியாதது.

மாணவன் மறைந்து 12 நாட்கள் ஆகியும், குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்குப் பதிலாக போராட்டத்தை ஒடுக்குவதிலும் வழக்குப் பதிவு செய்வதிலும் தான் காவல்துறை குறியாக இருக்கிறது.

இந்த பிரச்சினையில் முதலமைச்சர் தலையிட்டு, மாணவன் மரணத்தில் நடந்தது என்ன? அவர் கொலை செய்யப்பட்டாரா? அதற்கு காரணம் யார்? என்பதை எல்லாம் எந்த குறுக்கீடும் இல்லாமல் விசாரணை செய்ய உத்தரவிட வேண்டும்.

குறிப்பாக சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு உத்தரவிட்டு குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்களை கைது செய்து உரிய தண்டனையை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மரணமடைந்த மாணவனின் குடும்பத்தார் மீது போடப்பட்ட வழக்கை திரும்பப்பெற்று, அவர்களுக்கான நீதி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் தொடர்பாக திமுக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் காஞ்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் க.சுந்தர் தலைமையில் நடைபெற்றது. தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டி.ஆர்.பி ராஜா பங்கேற்று இடைத் தேர்தல் களத்தில் சமூக வலைத்தளப் பணிகளை மேற்கொள்வது குறித்த ஆலோசனைகளையும், எளிமையான செயல்முறை விளக்கங்களையும் வழங்கினார். இந்தக் கூட்டத்தில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் செல்வம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.வி.எம்.பி,எழிலரசன், மாவட்ட –ஒன்றிய– நகர– பேரூர்க் கழக நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## மாபெரும் தலைவர்கள் அமர்ந்து அலங்கரித்த வரலாற்றுச் சிறப்புமிக்க

# தமிழ்நாடு சட்டமன்ற மாண்பை அவமரியாதை செய்யும் முதல்வர்!

## மல்லை சத்யா தலைமையில் நடைபெற்ற திராவிட வெற்றிக் கழகக் கூட்டத்தில் கண்டனம்!

திருச்சி, செப். 19 -

திருச்சி மன்னார் புரம் ஜமால் முஹம்மது கல்லூரி VSM மகாலில் 15/09/2026 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற திராவிட வெற்றிக் கழகத்தின் முப்பெரும் விழாவில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் வருமாறு:

மதுராந்தகம்/தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல்,

2030 ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய தேர்தல் ஒரே ஆண்டில் இரண்டாவது முறையாக தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏன் எதற்கு யாரால் ஏற்பட்டது ?

இடைத்தேர்தல் நடைபெற வேண்டிய விழுமிய காரணங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இயற்கை எய்தி இருக்க வேண்டும் அல்லது நீதிமன்றத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்று இருக்க வேண்டும் இவையெவையும் நடைபெறாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாட்களிலேயே தன் சுயலாபத்திற்காக பதவியை ராஜினாமா செய்ததால் மக்களின் வரிப்பணம் நேரம் காலம் வீணாக விரையம் ஆகிறது.

சரியான காரணம் இல்லாமல் பொறுப்பற்ற முறையில் ராஜினாமா செய்யும் நபரால் ஏற்படும் பொருளாதார இழப்பை சம்பந்தப்பட்ட நபரிடம் வசூலித்து இனி அவர் தேர்தலில் போட்டியிட முடியாத அளவிற்கு சட்ட திருத் தத்தை தேர்தல் ஆணையம் செய்ய வேண்டும்.

ஒரு கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று மற்றொரு கட்சியில் சேரும் போது கட்சித் தாவல் சட்டத்தின் மூலம் பதவி இழப்பதைப் போன்று இனி தேர்தலில் நிற்க முடியாது என்ற நிலை வந்தால் ஒழிய குதிரை பேர அரசியல் போன்ற கோமாளி கூத்து க்கள் நடப்பதை தவிர்க்க முடியாது என்பதை ஜனநாயக சக்திகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே ஜனநாயகப் படுகொலை செய்த அதே நபர் மீண்டும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்ட மன்ற இடைத் தேர்தலில் போட்டியிட்டால் அவரை ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்களான வாக்காளர்கள் நிராக ரித்து தக்க பாடம் புகட்ட திராவிட வெற்றிக் கழகத்தின் சார்பில் வாக்காளர்களை கேட்டுக் கொள்கிறது,

### மிசா சட்டம்

1971 ஆம் ஆண்டு மே மாதம் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் உள்நாட்டு பாதுகாப்பு பராமரிப்பு என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட (maintenance of internal security act) சட்டம் பொது அமைதியை காப்பதற்கு என்ற பெயரில் எவர் ஒருவரையும் எவ்வித விசாரணை யும் இன்றி சிறையில் அடைக்க அவரின் உடமைகளை பறிமுதல் செய்ய அதிகாரம் வழுங்கக்கூடிய ஒன்றாக இருந்தது.

இச்சட்டத்தை இந்திரா காந்தி அவர்கள் நெருக்கடி நிலையை 1975 ஆண்டு முதல் 1977 வரை அமல்படுத்தி நாட்டில் உரிமைக்கு ரல் எழுப்பும் தலைவர்களை கைது செய்து சித்திரவதைக்கு உள்ளாக்கி கடுங்காவலில் சிறைப் படுத்தினார்.

உள்நாட்டு பாதுகாப்பு என்ற பெயரில் மனித உரிமைகளை நசுக்குவதற்கும் அரசியல் பழிவாங்கல்களுக்கும் மட்டுமே அந்த சட்டம் தவறாக பயன்படுத்தப்பட்டது. இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம் என்பதைப் போன்று ஜெயபிரகாஷ் நாராயணன், அடல் பிகாரி வாஜ்பாய், லல்லு பிரசாத், அத்வானி, ஜார்ஜ் பெர்னாண்டஸ் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டவர்களில் முக்கிய மானவர்கள்.

தமிழ்நாட்டில் 1976 இல் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டு தி.மு.க.வின் மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் தற்போதைய தி.மு.க. தலைவர் தளபதி ஸ்டாலின் திராவிட வெற்றிக் கழகத்தின் தற்போதைய நிர்வாகிகளான திருச்சி மிசா சாக்ரடிஸ் சென்னை திராவிட ரத்னா இளவழகன் உள்ளிட்ட திராவிட இயக்க செயல்பாட்டாளர்கள் கைது செய்து சிறையில் அடைத்து சித்திரவதைக்கு உள்ளானார்கள்.

சென்னை மத்திய சிறைச்சாலை மிசா கைதி எண் 1579 தளபதி ஸ்டாலின் அவர்களின் மீதான தாக்குதல் என்பது மிக கொடுமையானதாக இருந்துள்ளது அப்போது அவரை காப்பாற்றுவதற்கு மனித கேடயமாக நின்ற சிட்டிபாபு மற்றும் ஆர்க்காடு வீராசாமி ஆகியோர் கொடூரமாக தாக்கப்பட்டனர் பின்பு சிட்டிபாபு அவர்கள் மரணம் அடைந்தார். இவை இந்திய ஜனநாயகத்தின் கருப்புப் பக்கங்கள் இப்படிப் பட்ட தியாக வரலாறு நிறைந்த மிசா கொடுமை குறித்து தமிழ்நாடு சட்ட மன்றத்தில் முதலமைச்சர் ஜோசப் விஜய் தி.மு.க. தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்களின் முகத்தை காவலர்கள் தாக்கியதை உருவ கேலி செய்து பேசியது கடும் கண்டனத்திற்கு உள்ளானது. எனவே தான் த.வெ.க. கூட்டணி யில் அங்கம் வகிக்கும் இடதுசாரி ஜனநாயக சக்திகள் கண்டனம் தெரிவித்து உள்ளதை திராவிட வெற்றிக் கழகம் வரவேற்கிறது

மூதறிஞர் ராஜாஜி,கர்மவீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா,முத்தமிழ் அறிஞர் கலைஞர்,புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., அம்மையார் ஜெயலலிதா, திராவிட மாடல் பொற்கால ஆட்சியின் நாயகன் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உள்ளிட்ட மாபெரும் தலைவர்கள் அமர்ந்து அலங்கரித்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழக சட்டமன்றத்தின் மாண்பை தன் உடல் மொழியால் அவமரியாதை செய்த முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் செயல்பாடு மிகுந்த வருத்தத்திற்கும் கண்டனத்திற்கும் உரியது . சர்வாதிகார அடக்கு முறை சட்டங்கள் பிற்கா லத்தில் திராவிட இயக்க தீரர்களை அலங்கரிக்கும் பட்டங்களாக மாறியது என்பது வரலாறு

முன்னாள் பீகார் முதல்வர் லல்லு பிரசாத் தன் மிசா வாழ்க்கையை நினைவு கூரும் வகையில் தன் மகளுக்கு மிசா பாரதி என்று பெயர் சூட்டினார் திராவிட வெற்றிக் கழகத்தின் கருஞ்சட்டை கருத்தியல் பாசறை மாநில தலைவர் சாக்ரடிஸ் மிசா சாக்ரடிஸ் ஆனார். இப்படி தியாகங்கள் நிறைந்த மிசா வரலாற்றை தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் முதல்வர் ஜோசப் விஜய் அவர்களும் அவரின் அமைச்சரவை சகாக்களும் அறிந்து கொள்ளாமல் கொச்சைப்படுத்தி பேசுவதை திராவிட வெற்றிக் கழகம் கவலையோடு பார்க்கிறது.

இந்திய ஜனநாயகத்தைப் பாதுகாக்க சர்வாதிகார அடக்குமுறையை எதிர்த்து தியாகம் செய்தவர்களின் வரலாற்றை அறிந்து கொள்ளாமல் இருப்பது கவலைக்குரியது காரணம் மிசா என்னும் அவசர நிலை பிரகட னத்தையே அறிந்து கொள்ளாதவர்கள் எப்படி நாட்டின் சுதந்திரப் போராட்ட வரலாற்றையும் மொழிப்போர் உள்ளிட்ட உண்மையான தியாக வரலாறு களையும் அறிவார்கள் என்று என்னத் தோன்றுகிறது. எனவே தொடர்ச்சியாக பொறுப்பு இல்லாமல் பேசுவதும் பின்னர் வருத்தம் தெரிவிப்பதும் முதலமைச்சர் பொறுப்பு வகிப்பவருக்கு அழகல்ல என்று திராவிட வெற்றிக் கழகத்தின் முப்பெரும் விழா சுட்டிக் காட்டுகிறது,

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மதுரையில் பிளஸ் 1 மாணவர் ஆணவக்கொலை:

# மாணவனின் மரணத்திற்கு நீதிகேட்டு ஆட்சியர் அலுவலகம் முற்றுகை!

## குற்றவாளிகளுக்கு ஆதரவாக காவல்துறை செயல்படுவதாக குற்றச்சாட்டு!

மதுரை, செப். 19 -

மதுரையில் 11ம் வகுப்பு மாணவர் மர்மமான முறையில் மரணமடைந்த சம்பவத்தைக் கண்டித்து, மாணவர் அமைப்பினர் ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகை யிட்டு போராட்டம்நடத்தினர்.

மதுரை ஆனையூர் பகுதியில் 11ம் வகுப்பு பள்ளி மாணவர், கடந்த செப்டம்பர் 7ம் தேதி மர்மமாக உயிரிழந்தார். அதனைத்தொடர்ந்து, மாணவனின் உடலை வாங்க மறுத்து அவரது பெற்றோர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், மாண வர் மரணத்திற்கு நீதி கோரியும், சந்தேக வழக்கை கொலை வழக்காக மாற்றக்கோரியும், மதுரை ஆட்சியர் அலுவலகத்தை மாணவ அமைப்புகள் முற்றுகை யிட்டு போராட்டம் மேற்கொண்டனர். ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகை யிட முயன்றவர்களை காவல்துறையினர் தடுத்து நிறுத்தியதால், தள்ளுமுள்ளு ஏற்பட்டது. தொடர்ந்து, மாணவரின் மரணத்தில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மாநகர காவல்துறை துணை போவதாகவும், இது தொடர்பான விசாரணையை முறையாக நடத்தக்கோரியும் அவர்கள் முழக்கமிட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை போலீசார் குண்டுக்கட்டாக தூக்கி கைது செய்ததால், ஆட்சியர் அலுவலகத்தில் பரபரப்பு நிலவியது.

## மதுராந்தகம் தொகுதி கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து

# விளையாபுத்தூர் 39 வது பாகத்தில் அண்ணாநகர் வடக்கு பகுதியினர் தேர்தல் பணி கலந்துரையாடல்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு – ச.பரமசிவம் ஆலோசனை வழங்கினர்!

*காஞ்சிபுரம், செப். 19 -*

*மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளரும், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தேர்தல் பணிகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார்.*

*அதனைத் தொடர்ந்து, அண்ணாநகர் வடக்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட வளையா புத்தூர் பாகம் எண்: 39 இல் உள்ள கழக நிர்வாகி களுடன், அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் தேர்தல் பணிகள் தொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்டார்.*

*இந்நிகழ்வில் 100 வது வட்டச் செயலாளர் ஆ. ஏகாம்பரம், 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ், 103 வது வட்டச் செயலாளர் பி. ஜெய்சங்கர், 101 வது (அ) வட்டச் செயலாளர் சி.பி.திருமலை, 100 வது (அ) வட்டச் செயலாளர் கு.பாபு, 102 வது வட்டச் செயலாளர் பி.சந்திரசேகர், 102 (அ) வது வட்டச் செயலாளர் எம்.ஜி. ரவிக்குமார், 103 (அ) வது வட்டச் செயலாளர் அருள் கண்ணன், கழக உடன்பிறப்புகளும், கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.*

## விலைவாசியும் புலிகேசியும்...!



கடிவாளம்
இல்லாத குதிரையாக
விலைவாசி

கட்டுப்பாடற்ற
சட்டம் ஒழுங்கு...

வந்து வந்து போகும்
மின்சாரத்துக்கு

வரலாறு காணாத
கட்டணக் கொள்ளை..

நிர்வாகம் தெரியாத
அமெச்சூர்
அமைச்சர்கள்...

நிஜத்தோடு
நிழலை
சேர்த்துக் குழப்பும்
தலைமைத்துவம்
இல்லாத
மாலுமியாக
முதலமைச்சர்...

சாதி மத
அடையாளங்களை
அரசியலோடு சேர்த்து
அரசிலும்
வலியத் திணிக்கும்
முகச்சுளிப்புகள்...

விளம்பரத்தைக்
கொண்டு
வெத்துப் படத்தை
வெற்றிப் படமாக்க
முயற்சிக்கும்
சினிமாத் தனங்கள்...

இப்படி

பிழைகளை
தோரணமாக்கிக்
கொண்டு

"தான் செய்வது அனைத்தும் சரியானது"

"அது விமர்சிக்கப்
படக் கூடாதது"
என்னும் தன்னம்பிக்கை பிறழ்ந்த
சர்வாதிகார மனப்பான்மையில்
நடக்கும்

இந்த
நடைவண்டி
ஆட்சி

தமிழகத்தின் எதிர்காலத்தை பின்
னோக்கி நகர்த்துகிறது...


கொரோனா தாக்கத்தினும்
கொடுஞ்சீரழிவை தமிழ்
நாடு சந்திக்கப் போகிறது...

ஆம்...

" சிந்திந்து
ஓட்டுப் போடுவதற்கு பதில்

ஓட்டுப் போட்டுவிட்டு
சிந்திக்கும்
பரிதாபத்தில்
மக்கள்" ...

**என்னநாஞ் சொல்றது!**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்
குழு துணைத் தலைவர்

## தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில்

# பள்ளிப்பட்டு பகுதியை சார்ந்த ஏழுமலைக்கு மருத்துவ உதவி ரூ.25 ஆயிரம்!

## மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் வழங்கினார்!

*திருவள்ளூர், செப்.19; கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி, கழக இளைஞரணிச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் மருத்துவச் சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக தொடர்ந்து நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.*

*அதன் தொடர்ச்சியாக, திருவள்ளூர் மேற்கு மாவட்டம், பள்ளிப்பட்டு ஒன்றியம், கர்லம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த ஏழுமலை என்பவரின் மருத்துவச் சிகிச்சைக்காக ரூ.25 ஆயிரம் மதிப்பிலான மருத்துவ உதவித்தொகை வழங்கப்பட்டது. இதற்கான காசோலையை திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் முன்னிலையில் ஏழுமலைக்கு வழங்கினார்.*

*உதவித்தொகையைப் பெற்றுக்கொண்ட ஏழுமலை கூறுகையில், பொது மக்கள் மற்றும் கழகத் தோழர்களின் பல்வேறு தேவைகளுக்கு உதவிக்கரம் நீட்டும் வகையில் தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். மேலும், மருத்துவச் சிகிச்சைக்காக உதவி தேவைப்பட்ட நேரத்தில் தமது குடும்பத்திற்கு ஆதரவாக ரூ.25 ஆயிரம் மருத்துவ உதவித்தொகை வழங்கியிருப்பது மிகுந்த நன்றிக்குரியது என்றும், இந்த உதவி தங்களுக்கு பெரும் பயனளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த நேரத்தில் மருத்துவ உதவித்தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொண்ட கழகத் தலைவர் அவர்களுக்கும், கழக இளைஞரணிச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளைக்கும் எனது குடும்பத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.*

*இந்நிகழ்வில் பள்ளிப்பட்டு ஒன்றியக் கழகச் செயலாளர் பி.டி.சந்திரன், நிர்வாகிகள் முரளி சேனா, எஸ்.சின்னா, மணி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.*



முன்னாள் வட்ட பிரதிநிதியும் முத்த முன்னோடியுமான கே.நாகராஜ் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று தற்போது இல்லத்தில் ஒய்வு பெற்று வரும் தகவலறிந்து தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா அவரது இல்லத்திற்கு நேரில் சென்று உடல்நலம் குறித்து கேட்டறிந்தார் உடன் 64,வது வட்டக் கழக செயலாளர் கே.ரமேஷ்பாபு,தலைமை கழக பேச்சாளர் பி.வி.ஏகாம்பரம் மற்றும் கழக தோழர்கள் உள்ளனர்.





நடைபெற உள்ள மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், திராவிட முன்னேற்ற கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, சென்னை மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம், கரிக்கிலி, வேடந்தாங்கல், வெள்ளாப்புத்தூர் பகுதி நிர்வாகிகளுக்கு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேர்தல் களப்பணிகளை முழு வீச்சில் மேற்கொண்டு, நமது வேட்பாளரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றி பெறச் செய்வது குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றியக் கழகச் செயலாளர், கிளைக் கழகச் செயலாளர்கள், சென்னை மேற்கு மாவட்டப் பகுதி கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.